12TH STD அரையாண்டுத்தேர்வு - மாதிரி வினாத்தாள் - 2022

# கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண் : 90

## பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
   அ) நிறுமம் ஆ) அரசு
   இ) சிறிய அளவிலான தனியாள் வணிகம் ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்

2. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
   அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்

3. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது
   அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம்
   ஆ) அந்த ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்
   இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்கச் செலுத்தல்கள்
   ஈ) அந்நாளைய ரொக்க மற்றும் வங்கி இருப்பு

4. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   அ) இலாபம் அல்லது நட்டம் ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   இ) உபரி அல்லது பற்றாக்குறை ஈ) நிதிநிலை

5. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
   அ) சமமான விகிதத்தில் ஆ) முதல் விகிதத்தில்
   இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

6. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.
   ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்.
   இ) கூட்டாளிகளுக்கு சம்பளம் அல்லது ஊதியம் அனுமதிக்கப்பட மாட்டாது.
   ஈ) கூட்டாள களிடமிருந்து பெற்ற கடன்மீதான வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்

7. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
   அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
   இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

8. மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது -- --
   அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) செலவு ஈ) இவற்றுள் எதுவுமில்லை

9. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத் தொகை உடனடியாக செலுத்தாதபோது, அது மாற்றப்படும் கணக்கு ------------
   அ) வங்கி க/கு ஆ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
   இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு ஈ) பிறகூட்டாளிகளின் முதல் க/கு



10. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு
    அ) சொத்து க/கு ஆ) ஆள்சார் க/கு இ) பெயரளவு க/கு ஈ) ஆள்சாரா க/கு

11. நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.
    அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல்
    இ) முதலினக் காப்பு ஈ) காப்பு முதல்

12. நடப்புப் பொறுப்பு ₹. 40,000 ; நடப் சொத்து ₹. 1,00,000 ; சரக்கிருப்பு ₹. 20,000 எனில் விரைவு விகிதம்
    அ) 1:1 ஆ) 2.5:1 இ) 2:1 ஈ) 1:2

13. எதிர்ப்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?
    அ தலைமைப் பதிவு
    ஆ) அலுவலக ப ன் ட்டிற் க வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்
    இ) அறிக்கைகள்
    ஈ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது

14. நிதிநிலை அறி கைகள் வெளிக்காட்டாதது
    அ) பணம்சாரா தகவல்கள் ஆ) கடந்தகால தகவல்கள்
    இ) குறுகியகால தகவல்கள் ஈ) நீண்டகால தகவல்கள்

15. முன்னுரிமை பங்கு என்பது -----------
    (i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் செலுத்துவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
    (ii கலைப்பின்போது பங்கு முதலை திரும்பப் பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
    அ) i) மட்டும் சரியானது ஆ) (ii) மட்டும் சரியானது
    இ) (i) மற்றும் (ii) சரியானது ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

16 வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையைவிட ஒப்பப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் அது :
    அ) முழு ஒப்பம் ஆ) அழைப்பு நிலுவை இ) குறை ஒப்பம் ஈ) மிகை ஒப்பம்

17. சம்பளக் கணக்கு பின்வரும் எந்த தலைப்பின் கீழ் வரும்?
    அ) நேரடி வருமானங்கள் ஆ) நேரடி செலவினங்கள்
    இ) மறைமுக வருமானங்கள் ஈ) மறைமுக செலவினங்கள்

18. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ₹. 1 25 000 லிருந்து ₹. 1,50,000 க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?
    அ) + 20 % ஆ) + 120 % இ) - 120 % ஈ) - 20 %

19. பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின் ஒரு கருவி அல்ல?
    அ) போக்குப் பகுப்பாய்வு ஆ) பொது அளவு அறிக்கை
    இ) ஒப்பீட்டு அறிக்கை ஈ) நிர்ணயிக்கப்பட்ட அடக்க விலையியல்

20. புற அக பொறுப்புகள் அளவிடுவது
    அ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன் ஆ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன்
    இ) இலாபம் ஈட்டும் திறன் ஈ) செயல் திறன்

## பகுதி --- II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 2 = 14$

21. நிலைஅறிக்கை என்றால் என்ன?
22. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.
23. தியாக விகிதம் என்றால் என்ன?
2 பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்.
25. பின்வரும் விவரங்களைக் கொண்டு இலாபம் மற்றும் நட்டம் காண்க

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல்1 இல் முதல் | 1,60,000 | கூடுதல் முதல் | 25,000 |
| 2019, மார்ச்1 இல் முதல் | 1,50 000 | அவ்வாண்டின் எடுப்புகள் | 30,000 |

26. மணி என்ற கூட்டாளி 2018, செப்டம்பர் 1 அன்று ₹. 30,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

27. நிறுவனத்தின் நற்பெயர் கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி இலாபத்தின் மூன்று ஆண்டு கொள்முதல் என மதிப்பிடப்படுகிறது. ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹. 4,000, ₹. 3,000, ₹. 5,000, ₹. 1,000, ₹. 2,000, நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக

28. அருள் மற்றும் அனிதா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 4:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 31.3.2018 அன்று புதிய கூட்டாளியாக அஜய் என்பவர் சேர்த்து கொள்ளப்பட்டார். சேர்க்கையின் போது, நிறுவன ஏடுகளில் பொதுக்காப்பு ₹. 42,000 எனக் காட்டியது. பொதுக்காப்பினை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

29. கயல், மாலா மற்றும் நீலா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 2:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். கயல் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். மாலா மற்றும் நீலாவுக்கும் இடையே உள்ள புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3:2 ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

30. ஒரு நிறுமம் பங்கொன்று ₹. 10 வீதம் 5,000 நேர்மைப்பங்குகளை ₹. 2 முனைமத்தில் வெளியிட்டது. அனைத்து தொகையும் விண்ணப்பத்துடன் பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 3 = 21$

31. ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறு குறிப் வரையவும்.

32. Tally.ERP 9- ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.

33. கூட்டாளி விலகலின் போது செய்யப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை பட்டியலிடவும்.



34. ஒரு சங்கத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டு சந்தா மூலம் பெற்ற வருமானத்தைக் கணக்கிடவும்.

| விவரம் | 01.01.2018 ₹ | 31 12 2018 ₹ |
|---|---|---|
| பெறவேண்டிய சந்தா | 6,000 | 8000 |
| முன்கூட்டி பெற்ற சந்தா | 2 00 | 7,000 |

2018 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா ₹ 90,000

35. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையை காணவும் :

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| 201 ஜனவரி 1 அன்று பற்பல கடனாளிகள் | 40,000 |
| விற்பனைத் திருப்பம் | 2,000 |
| கடனாளிகளிட ிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 1,00,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று பற்பல கடனாளிகள் | 60,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |

36. சுனில், சுமதி மற்றும் சுந்தரி என்ற கூட்டாளிகள், தங்கள் இலாபங்களை 3:3:4 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். சுந்தரி என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார் மற்றும் அவருடைய பங்கு முழுவதையும் சுனில் எடுத்துக் கொள்கிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

37. அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்க.

| விவரம் | 2016 - 2017 (₹) | 2017 -2018 (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 50,000 | 60,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 40,000 | 50 000 |

38. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்
மொத்த நடப்புப் பொறுப்புகள் ₹. 2,40,000; மொத்த நடப்புச் சொத்துகள் ₹. 4,50,000; சரக்கிருப்பு: ₹. 70,000; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்: ₹. 20,000

39. கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹. 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4 % விதிக்கப்பட வேண்டும். எடு புகள்மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும் அவர்
   1) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்
   2) ஒவ்வொரு மாத நடுவில் எடுத்திருந்தால்
   3) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

40. இலாப தன்மை விகிதங்கள் யாவை? அவை எவ்வகையில் வெளிப்படுத்தப்படுகின்றன?

# பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. அ) திரு. ராஜூ மு றயான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| விவரம் | 01.01.2018 ₹ | 31.12.2018 ₹ |
|---|---|---|
| கைரொக்கம் | 80,000 | 90 000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30 000 | 1,95,000 |
| வங்கிகடன் | 60 000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹. 50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ₹. 2,500 எடுத்துக் கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாபநட்ட அறிக்கை தயாரிக்கவும்.

( அல்லது )

ஆ) சம்பத் நிறுமம் 25,000 நேர்மைப் பங்குகளை, பங்கு ஒன்று ₹. 10 என பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹. 3, ஒதுக்கீட்டின் போது ₹. 4, முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹. 3 செலுத்தப்பட வேண்டும். பொது மக்களால் 24,000 பங்குகள் ஒப்பப்பட்டன. இயக்குனர்கள் அனைத்து பங்குகளையும் ஒதுக்கீடு செய்தனர். அதற்காக தொகை முழுவதும் முறையாகப் பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

42. அ) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | தொகை (₹) | செலுத்தல்கள் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு கை ரொக்கம் | 14,000 | சம்பளம் | 20 000 |
| வட்டி பெற்றது | 5,000 | வாடகை | 24,0 0 |
| சந்தா | 55,000 | பயனச் செலவுகள் | 2,00 |
| உயில்கொடை | 48,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| அறைகலன் விற்றது ( ஏட்டு மதிப்பு ₹. 17,000 ) | 16,00 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33, 00 |
| | | இருப்பு கீ/ இ கைரொக்கம் | 1 000 |
| | 1,45,000 | | 1,45,000 |



( அல்லது )

ஆ) ஜோன்ஸ் நிறுமத்தின் பின்வரும் வியாபார நடவடிக்கையிலிருந்து,
(i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் மற்றும்
(iii) இயக்க அடக்க விலை விகிதம்

**இலாப நட்ட அறிக்கை**

| வ வ ம் | தொகை ₹. |
|---|---|
| 1. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 4,00,000 |
| 1. இதர வரு ானம் முதலிடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 4,000 |
| I. மொத்த வருவாய் | 4,04,000 |
| **செலவுகள்** | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 2,10,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 30,000 |
| நிதிசார் செலவுகள் | 24,000 |
| இதர செலவுகள் ( நிர்வாகம் மற்றும் விற்பனை ) | 60,000 |
| II மொத்த செலவுகள் | 3,24,000 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் ( I - II ) | 80,000 |

அ) ப ன்வரும் தகவல்களிலிருந்து சாந்தி மற்றும் சுமதி என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகள அவர்களின் முதல், நிலை முதல் எனக் கொண்டு, அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | ரூபன் ₹ | டெரி ₹ |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 1,00 000 | 80,000 |
| 2018, ஜனவரி 1 அன்று நடப்புக் கணக்கு ( வ ) | 5 000 | 3,000 |
| 2018 ஜூன் 1 கூடுதல் முதல் கொண்டு வந்தது | 0,000 | 20,000 |
| 2018 ஆம் ஆண்டின் எடுப்புகள் | 20,000 | 13,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 500 | 300 |
| 2018 - ல் இலாபப் பங்கு | 10,000 | 8,000 |
| முதல் மீது வட்டி | 6,300 | 5,400 |
| ஊதியம் | 9,000 | — |
| கழிவு | — | 1,200 |

( அல்லது )

ஆ) கஜா வரையறு நிறுமம் பங்கு ஒன்றின் மதிப்பு ₹. 10 வீதம் 40,000 பங்குகளை பொதுமக்களிடம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹. 2, ஒதுக்கீட்டின் போது ₹. 5 மற்றும் முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹. 3 என தொகை செலுத்தப்பட வேண்டும். 50,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 40,000 பங்குகளுக்கு விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன கூடுதலாக உள்ள விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தப்பட்டது அனைத்து தொகையும் முறையாகப் பெறப்பட்டன எனக் கொண்டு, குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

44. அ) சீனு மற்றும் சிவா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். சுப்பு என்பவரை புதிய கூட்டாளியாக சேர்க்கும் போது அவர்கள் பின்வரும் முடிவுகள் எடுத்தனர்

i) கட்டடம் மதிப்பினை ₹. 40,000 உயர்த்த வேண்டும்.

ii) கணக்கேடுகளில் இதுவரை பதியப்படாத ₹. 10,000 மதிப்புள்ள முதலீடுகளை கணக்கில் கொண்டுவர வேண்டும்.

iii) இயந்திரம் மதிப்பு ₹. 14,000 மற்றும் அறைகலன் மதிப்பு ₹. 12,000 குறைக்க வேண்டும்.

iv) பற்பல கடனீந்தோரில் ₹. 16,000 போக்கெழுத வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயார் செய்யவும்.

( அல்லது )

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த கொள்முதலைக் கணக்கிடவும்

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| 2018, ஜனவரி1 அன்று பற்பல கடனீந்தோர் | 30,000 | கொள்முதல் திருப்பம் | 15,000 |
| 2018, ஜனவரி1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 25,000 | ரொக்க கொள்முதல் | 2,25,000 |
| கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 1,20,000 | 31.12.2018 அன்று கடனீந்தோர் | 25,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு செலுத்தியது | 30,000 | 31.12.2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |

45. அ) கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| கைரொக்கம் ( 1.1. 2018 ) | 4,000 | அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| சம்பளம் கொடுத்தது | 3,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 10 00 | தொடர் விளையாட்டுப் போட்டி வரவுகள் | 14 000 |
| சந்தா பெற்றது | 15,000 | தொடர் விளையாட்டுப் போட்டி செலவுகள் | 1 500 |
| வாடகை பெற்றது | 2,000 | முதலீடுகள் வாங்கியது | 25 000 |



( அல்லது )

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து, உயர் இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

1) பயன்படுத்தப்பட்ட முதல் : ₹. 80,000

2) சாதாரண இலாபவிகிதம் : 20%

3) 5 ஆண்டுகளுக்குரிய நிகர இலாபம் :

2014: ₹. 20,000 ; 2015: ₹ 30, 00 0 6: ₹. 35,000; 2017: ₹. 40,000 மற்றும் 2018: ₹. 45,000

4) கூட்டாளிகளுக்கான உழை தியம் ஆண்டுக்கு ₹. 4,000

46. அ மரியா மற்றும் கலா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2019 மாரச் 31 ஆம் நாளோ டு முடிவடையும் ஆண்டுக்குரி பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்

| விவரம் | மரியா நிறுமம் (₹) | கலா நிறுமம் (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,00,000 | 2,00,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 70,000 | 1,20,000 |

( அல்லது )

ஆ இரத்னா, பாஸ்கர், மற்றும் இப்ராஹிம் ஆகிய கூட்டாளிகள் 2 : 3 : 4 என்ற விகிதத்தில் இலாப ந டங்களை பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 அன்று இரத்னா இறந்து விட்டார். அவருக்குச் செலுத்த வேண்டிய இறுதித் தொகை ₹. 1,00,000 வரவு இருப்பினைக் காட்டியது. கீழ்கண்ட சூழ்நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

i) சேரவேண்டியத் தொகை உடனடியாகக் காசோலை மூலம் செலுத்தப்பட்டது

ii) சேரவேண்டியத் தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை

iii) ₹. 60,000 காசோலை மூலம் உடனடியாகச் செலுத்தப்பட்டது

iv) இறந்த போன கூட்டாளிக்கு ( இரத்தனா ) செலுத்த வேண்டிய தொகை யாருக்கு செலுத்தப்பட வேண்டும்?

47. அ) டேனியல் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்க

| விவரம் | 2015 - 2016 (₹) | 2016 - 2017 (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 40,000 | 50,000 |
| இய கச் சலவுகள் | 25,000 | 27,500 |
| வருமான வரி % ( வரிக்கு முன்னர் உள்ள இலாபத்தில் ) | 30% | 30% |

( அல்லது )

ஆ) இலக்குமி நிறுவனத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| I <u>பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்</u> | |
| 1) <u>பங்குதாரர் நிதி</u> | |
| நேர்மைப் பங்குமுதல் | 4,00,000 |
| 2) <u>நீண்டகாலப் பொறுப்புகள்</u> | |
| நீண்டகாலக் கடன்கள் | 2,00,000 |
| 3) <u>நடப்பு பொறுப்புகள்</u> | |
| அ) குறுகிய காலக் கடன்கள் | 50,000 |
| ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 3,10,000 |
| இ) இதர நடப்பு பொறுப்புகள் | |
| கொடுபடவேண்டிய செலவுகள் | 15,000 |
| ஈ) குறுகியகால ஒதுக்குகள் | 25,000 |
| மொத்தம் | 10,00,000 |
| II. <u>சொத்துகள்</u> | |
| 1) <u>நீண்டகால சொத்துகள்</u> | |
| அ) நிலைச் சொத்துகள் | |
| புலனாகும் சொத்துகள் | 4,00,000 |
| 2) <u>நடப்புச் சொத்துகள்</u> | |
| அ) சரக்கிருப்பு | 1,60,000 |
| ஆ) வணிகக் கடனாளிகள் | 3,20,000 |
| இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 80,000 |
| ஈ) இதர நடப்புச் சொத்துகள் | |
| முன்கூட்டி செலுத்திய செலவுகள் | 40,000 |
| மொத்தம் | 10,00,000 |

அ) நடப்பு விகிதம்  ஆ) விரைவு விகிதம் கணக்கிடவும்